PERIODICALS DIVISION LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78

மலர்: 21 ஆடி: 7 ஷஃபார்: 27 இதழ்: 160
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-7-79

## கடல் கொந்தளிப்பு: எழுநூறு பேர் பலி!

[ஜாகர்த்தா]

இந்தோனேஷியாவில் உள்ள ஒரு தீவில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் எழுநூர் பேர் மாண்டனர்!

இக் கோரச் சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இக் கடல் கொந்தளிப்பினால் கடலோரப்பகுதியிலிருந்த நான்கு கிராமங்களை கடல்கொண்டதென்றும், இக்கிராமங்களில் எழுநூற்றுக்கும் அதிகமானவர்களை வசித்து வந்தனர் என்றும் நேற்று இங்கு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட செய்திகள் தெரிவித்தன.

### இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் தேவி மகோற்சவ 7ம் திருவிழா இன்று நடைபெறுகிறது. தேவி இன்றிரவு 8 மணிக்கு புஷ்பப் பல்லக்கில் வீதியுலா வருவார். [செ]

# ஜனநாயக நடவடிக்கை மூலம் பயங்கரவாதம் ஒழிக்கப்படும்

## லண்டனில் பிரதமர்

[லண்டன்]

''இலங்கையில் தலைதூக்கியுள்ள பயங்கர வாதத்தை முறியடிக்க, இலங்கை அரசாங்கம் ஜனநாயக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது'' என்று பிரதமர் திரு ஆர். பிரேமதாசா நேற்று லண்டனில் தெரிவித்தார்.

லண்டன் தேயிலைநிலையத்தில் அளிக்கப்பட்டவரவேற்பொன்றில் இலங்கை சமூகத்தவர் மத்தியில் பிரதமர் பிரேமதாசா பேசுகையில் மேலும் கூறியதாவது!

''நாட்டின் ஜனநாயக வாழ்க்கை முறையைச் சீர்குலைக்கும்வகையில் பயங்கர வாத நடவடிக்கைகள் இடம் பெற்றுவருவதை அரசாங்கம் ஒருபொழுதும் அனுமதிக்கமுடியாது. நாட்டில் அமைதியை நிலைநாட்டி, மக்களின் முன்னேற்றத்துக்கான சுமுக நிலைமைக்கொண்டுவர அரசாங்கம் தன்னாலியன்ற சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

''ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம், இந்த நாட்டில் சுதந்திர, நீதியான சமுதாயமொன்றை உருவாக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க சில சக்திகள் ஈடுபட்டுவருகின்றன. இன மத கட்சி வேறுபாடுகளின்றி, நாட்டின் சகலபிரிவினரும் பயங்கரவாதத்தை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டமுன்வரவேண்டுமெனபல பிரிவு மக்களும் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர். இவ் [illegible] மிகவும் உறுதியாக நிற்கிறது. பயங்கரவாதத்தை முறியடிக்க ஜனநாயக நடவடிக்கைகளை அரசு இப்பொழுது மேற்கொண்டுள்ளது'' என்று பிரதமர் திரு. பிரேமதாசா தெரிவித்தார்.

## ''அரசின் திட்டங்களுக்கு அதிகமான பலன்''

### சகல இன மக்களினதும் ஆதரவை ஜனாதிபதி கோருகிறார்

[அத்தனகலை]

அரசின் பொருளாதார, சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்பார்த்ததை விட கூடுதலான பலன் [illegible] இயந்திரசாதனங்களின் மனித சக்தி போன்ற சில விஷயங்களினால் சில பிரச்னைகளும் இருக்கத்தான் செய்கின்றன'' என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று மாலை இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

நிலமற்ற 245 குடும்பங்களுக்கு 300 ஏக்கர் காணியை பகிர்ந்துசெய்யும் வைபவத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றினார்.

''அரசின் கொள்கைகளையல்லாது அவை அமுல்படுத்தப்படும் முறையையே எதிர்க்கட்சியினர் எதிர்க்கின்றனர்'' என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ஜெயவர்த்தன;

கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. [illegible] இரண்டு லட்சம்பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள நான்கு வருடங்களிலும் நாட்டின் அபிவிருத்தி கருதி எதிர்க்கட்சி எம்முடன் ஒத்துழைப்பு தரமுடியாதா?'' என்று கேட்டார்.

#### மூன்று பிரச்னைகள்

''மூன்று பிரச்னைகள் நாட்டின் அபிவிருத்திக்கு சவாலாக வந்தன. ஒன்று சூறாவளி, மற்றது எண்ணெய் விலை ஏற்றம். மூன்றாவது பயங்கரவாதம். இவற்றை வெற்றிகொண்டு, நாட்டை முழுமுச்சில் முன்னேற்ற அரசு தயாராக உள்ளது. நாட்டு மக்கள் இன மத கட்சி வேறுபாடுகளை களைந்து நாட்டை அபிவிருத்திசெய்ய முன்வரவேண்டும்'' என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

## ஆட்சிஅமைப்பு : சவான் தோல்வி

# அரசு அமைக்கத் தயார் என்கிறார் சரண்சிங்

### ஜனாதிபதிக்கும் கடிதம்

[புதுடில்லி]

மத்தியில் புதிய அரசாங்கமொன்றை அமைப்பதில் முக்கிய அரசியல் கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட மும்முனைப் போட்டியிலிருந்து, திரு. வை பி சவான் நேற்று 'வாபஸ்' பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து 'நேரடிப் போட்டி' நடக்கும் சூழ்நிலை இப்பொழுது உருவாகியுள்ளது!

#### சவான் தோல்வி

இந்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதன் எதிரொலியாக பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, புதிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு முதலில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. வை பி சவான் இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டியினால் அழைக்கப்பட்டதும், திரு. சவான் பல அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியதும் தெரிந்ததே;

திரு. வை. பி சவான் நேற்று பாரத ஜனாதிபதி திரு சஞ்சீவரெட்டிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தமது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார்!

''அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் நான் தோற்றுவிட்டேன். மத்தியில் நிலையான அரசாங்கமொன்றை அமைப்பதில் பொருத்தமான நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ளலாம்', என்று திரு வை பி

6ம் பக்கம் பார்க்க

க. பொ. த. (உயர்தரம்)
விஞ்ஞானபாடங்கள்
1980 April 1980 August
ஆரம்பம்:- 1-8-79
விலங்கியல் - தாவரவியல் - தூயகணிதம்-பிரயோககணிதம்-பௌதிகம்- இரசாயனம்
யாழ்.முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
ccountancy
57, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடிச்சந்தி
யாழ்ப்பாணம்.
3113

### செய்தித் தணிக்கை

செய்தித் தணிக்கை இம்மாதம் 13-ந் திகதி முதல் அமுலிலிருந்து வருகிறது. 'ஈழநாடு'-வில் வெளிவரும் சகல செய்திகளும், தணிக்கைக்குள்ளாகியே பிரசுரமாகின்றன.

மக்கினென் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்
Mackinnon Travel Service (Ceylon) Ltd
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயக்கி வருகிறது.
இங்கு
● உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
● அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
● சுற்றுலாக்கள்
● பாஸ்போட்
● விசா
இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்
உங்கள் பிரயாண ஒழுங்குகளை
மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

## வரி விளம்பரம்

### தேவை

பீடிசுற்றுவதற்கும் பெண் பிள்ளைகள் தேவை. ஆயிரம் பீடி சுற்றுவதற்கு 10 ரூபா சம்பளம் வழங்கப்படும் நேரில் தொடர்பு கொள்க. 367, நாவலர் வீதி, (இலுப்பையடிச்சந்தி) யாழ்ப்பாணம்.
3106

நன்கு அனுபவமுள்ள மோட்டார் மெக்கானிக் பிற்றர்களும் மின்சார பிற்றர்களும் உடன் தேவை சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்கவும்; ஹரன் என்ஜினியரிங் வேக்ஸ் 61, ரெம்பிள் ரோட் யாழ்ப்பாணம்.
3109

### விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் - பொக்கணை ஒழுங்கையில் 10 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. இராசப்பா, கோணாவளை, வைரவர் கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
3111

### முதலிலேயே முற்றுன கட்டளைபற்றி அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற தும்பளை சுந்தையா பெண் செல்லமுத்துவின் மரணசாதன விடயமாய்
மரணமெய்தியவர்

மரணசாதன ) இல. 1074
நியாயாதிக்கம் )

வல்லிபுரம் சுந்தையா தும்பளை பருத்தித்துறை.
மனுதாரர்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதென்றும் 1979 ஆனி மாதம் 6-ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ள தென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1979 ஆடி 17-ந் திகதி நீதிமன்ற ஆணைப்படி,
பதிவாளர்,

என்னும் தயாரிக்கப்பட்டது.

மு, ஈசுரபாதம்
மனுதாரரின் சட்டத்தரணி.
3097

### வெற்றுப் பொருள்

தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள், 45 கலன் வெற்றுத்தகரங்கள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. மீளளிக்கப்படாத ரூபா 2/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம் விபரங்களுக்கு வைப்புப் பணத்துடன் தொடர்பு கொள்க. முடிவு திகதி 31-07-1979.

வைப்புப்பணம் - வெற்றுச் சாக்கு- ரூ. 100-00.
வெற்றுத்தகரம்-ரூ.50-00.

**பொது முகாமையாளர்,**
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.
3108

### முதலிலேயே முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கரணவாய் வடக்கு தம்பையா சிவகுருவின் மரணசாதன விடயமாய் மரணமெய்தியவர்.

மரணசாதன இல.
நியாயாதிக்கம் 1073

வேலுப்பிள்ளை செல்லத்துரை புலோலி தெற்கு, புலோலி;
மனுதாரர்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை] எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டதென்றும் 1979 வைகாசி 10ம் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1979 ஆடி 17ம் திகதி,
நீதிமன்ற ஆணைப்படி
[ஒப்பம்]

க. விஸ்வலிங்கம்
பதிவாளர்
என்னுல் தயாரிக்கப்பட்டது.

மு. ஈசுரபாதம்
மனுதாரரின் சட்டத்தரணி.
309

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### தேவை

மத்தியகிழக்கு நாட்டில்வேலைசெய்வதற்கு தாதிகள், கங்காணிகள், வீட்டுப்பணிப்பெண்கள் தேவை. வடமாகாணத்தில் உள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**சுபா ரவல் சேர்விஸ்**
**11/G, மொம்சக்கட்டிடம்,**
**ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.**
Lab. Lic. No-173
3114


## புதிய குரு

[சாவகச்சேரி]

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த எஸ் தோமஸ் அமலதாஸ் இம்மாதம் 26 ம் திகதி மாலை நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் கண்டி மறைமாவட்ட மேற்றிராணியார் அதி வந் போல் பெரேரா ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் கண்டியிலுள்ள தேசியக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலும் இறையியலும் பயின்றுர் இவர் கண்டி மறைமாவட்டத்திலே பணிபுரியவிருக்கின்றுர். [ஸ]

## மருத்துவமாதர் பயிற்சி

(சாவகச்சேரி)

மருத்துவ மாதர்களின் ஒரு வாரப்பயிற்சியைப்பெறும் முகமாக நான்கு மருத்துவ மாதர்கள் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் தங்கி பயிற்சிபெற்று வருகின்றனர்கள்.

## காசிதம்பதிகளுக்கு வரவேற்று

(நெல்லியடி)

பருத்தித்துறை தொகுதி விவசாய உத்தியோகத்தர்கள் அண்மையில் திருமணம் செய்த காசி ஆனந்தன் தம்பதிகளுக்கு வரவேற்புபசாரமொன்றினை அளித்தார்கள். காசி ஆனந்தன் இவ்வுபசாரத்திற்கு நன்றிதெரிவித்து உரையாற்றினுர். [ஸ]

## யோகேஸ் திறந்து வைத்தார்

[யாழ்ப்பாணம்]

தேர்குதற்கு 10 வீடுகள் திட்டத்தின்கீழ் அரசினுல் யாழ். குருநகரில் அமைக்கப்பட்டுள்ள 10 வீடுகளை நேற்று முன்தினம் யாழ் எம் பி திருவெ யோகேஸ்வரன் திறந்து வைத்தார் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு எஸ் சண்முகசுந்தரமும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார் [கொ-ஸ]

## கிறீஸ்துராசா உற்சவம்

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டி கிறிஸ்துராசா ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 28 ம் திகதி காலை நடைபெறும் ஆராதனையுடன் நிறைவு பெறும். 27 ம் திகதி மாலை தேவநற்கருணை ஆராதனையும் இடம் பெறும். ஆராதனைகளை கரவெட்டி பங்குக் கட்டளைக்குரவர் நடாத்தி வைப்பார்.

# தொகுதிகள் தோறும் மேலும் 20 வீடுகள்

## அமைச்சு தீர்மானம்

[பண்டத்தரிப்பு]

'தேர்தல் தொகுதிகள் தோறும் மேலும் இருபது வீடுகளை நிறுவுவதற்கு உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. எமது தொகுதியில் நிறுவப்பட்ட வீடுகளில் இதுவரை இடம் கிடைக்காதவர்களுக்கு விரைவில் அமைக்கப்படவுள்ள இந்த 20 வீடுகளில் சந்தர்ப்பம் வழங்கப்படும்'

இவ்வாறு வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பொன்னாலையில் நிறுவப்பட்டபத்து வீடுகளையும் உத்தியோகபூர்வமாக வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு மு சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில் வட்டுக்கோட்டை எம் பி திரு திருநாவுக்கரசு, வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 வீடற்றவர்களுக்கு வீடுகளை உத்தியோக பூர்வமாகக் கையளித்தார். திரு திருநாவுக்கரசு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இங்கு வழங்கப்பட்ட வீடுகளை பெற்றுக் கொண்டவர்கள் அவ்வீடுகளை சிறந்த முறையில் பேணி பராமரிக்க வேண்டும். இதுவரை காலமும இறந்த வெளியாக இருந்த பொன்னாலை பகுதியில் வீடுகள் நிறுவப்பட்ட பின்பு ஒருமுன்மாதிரிக் கிராமமாக விளங்கும். இப்பகுதியில் மின்சார, சுகாதார மற்றும் பொதுநல அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்தி தருவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும, பக்கநலன்கருதி சனசமூக நிலையம் ஒன்றும நிறுவப்படவுள்ளது".

இந்த 10 வீடுகளையும் மிகவும் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் நிறுவிய கட்டிட நிர்மாணக்கழகத்தினர் விரைவில் நிறுவப்படவுள்ள 20 வீடுகளையும இதேபோல் சிறந்த முறையில் அமைத்து தருவார்கள்' என்ருர்.

# 'மிஃறாஜ் நிகழ்ச்சி விஞ்ஞான பூர்வமானது"

[யாழ்ப்பாணம்]

'பெருமானுர் முஹம்மது [ஸல்] வின் இறை தரிசனமானது விஞ்ஞான பூர்வமானதாகும், நல்லடியார்கள் இறைவனை மறுமையில் தரிசிக்கலாம் எனத் திருக்குர் ஆன் விளக்கம் அளிக்கின்றது. அல்லாஹ்வின் தூதரான முகமது நபி [ஸல்] உயிருடனேயே இறை தரிசனம் பெற்றுர், நபிமார்களுக்கும் அமரர்களுக்கும் இயாமாக விளங்கும் பாக்கியத்தை அல்லாஹ் இறுதித் தூதருக்கு வழங்கினுன்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் நகர ஜும்மா மஸ்ஜிதில் நடைபெற்ற மிஃறாஜ் தின விழாவில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய அகில இலங்கை சதிப்மார்கள் மதிய சம்மேளனத்தின் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அரபு இஸ்லாமிய நாகரிகத்து விரிவுரையாளருமான மௌலவி. கே எம் எச் காலிதீன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட ஜம் இய்யத்துல் உலாமாசபைச் செயலாளர் மௌலவி ஓ எம். அப்துல் ரஸ்ஸாக்கின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரை நிகழ்த்திய மௌலவி காலிதீன் 'நபிகள் நாயகம் [ஸல்] இறைதரிசனம் பெற்றதின் மூலம் சுவர்க்கம் நரகம் ஆகியவற்றை நேரடியாக அவதானிக்கும் பாக்கியத்தைப் பெற்றுர். அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றவர்கள் பெற்றுள்ள பாக்கியங்களையும் புறக்கணித்தோர் படும் வேதனைகளையும் இதன் மூலம் அறிந்தார். இவ்வுலகில் பல்வேறு குற்றச் செயல்கள் புரிந்தோருக்களிக்கப்படும் வேதனைகளைபற்றிய விரிவான விளக்கங்களை ஹதீஸ்களில் இருந்து நாம் விளங்கிக் கொள்கின்ருேம் பெருமானுர் [ஸல்] அவர்களின் இறை தரிசனத்தின் மூலம் எமக்குக் கொண்டுவந்த பரிசு ஐவேளைத் தொழுகையாகும் இதனை உளச்சுத்தத்துடன் நிறைவேற்றுவோர் இறைதரிசனத்தைப் பெறுவார்கள எனப் பெருமானுர் [ஸல்] கூறியுளளார் புதுமைகளை நிகழும் விஞ்ஞான வளர்ச்சி அடைந்துள்ள இவ்வுலகில் ஆத்மீக பலத்தின் மூலம் மனித சிருஷ்டியின் நோக்கத்தினை அடைவதற்கு இஸ்லாம் மிகத்தெளிவானதும் இலகுவானதுமான வழியை அமைத்துள்ளது'' என்ருர்

அல்ஹாஜ் மௌலவி அப்துல் காதர் ஆலிம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

விசேஷ துஸ்பீஹ் தொழுகையை மௌலவி எம் எஸ். எம். புஹாரி நடாத்தினுர்.
(கொ-ஸ)


## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

திருக்குமார்

தோற்றம் 16-9-70 மறைவு 23-7-78



அன்புச் செல்வமே அறிவுச் செல்வமே எங்கள் மங்கா ஒளியே உன்னை எங்கேதான் தேடுவதோ திருக்குமரா உனைப் பிரியாமல் பிரிந்து அனலிட்ட புழுப்போல் என்றுமே துடித்துக் கொண்டிருக்கும் எங்களிடம் நீ வரவேண்டும் குமரா வந்து எங்களை மீட்கவேண்டும்: ஐயா உங்கள் வரவைக் காத்திருப்போம்; காத்திருப்போம், காலமெல்லாம் காத்திருப்போம். இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காத் திருக்குமரா! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை இரங்கும்

உங்கள் அம்மா, அப்பா, அக்கா. பபாஅருள், அங்கா அன்ரி மற்றும் உன் அன்புக்குரியோர்.
6 இராணிவீதி, நல்லூர்
3105


## குடிநீர் தேடும் வேலைகள் ஆரம்பம்

## வான் தோண்டும் வேலைகள் ஆரம்பம்

[புலோலி]

வடமராட்சிப்பகுதி மீனவர்களின் நன்மைகருதி தொண்டமானாறு, வல்வெட்டித்துறைப் பெரியகடற்கரை, ஆதிகோவிலடி, மீனாட்சி அம்மன் கோவிலடி, சங்கமுவகத்தடி, கொற்றியால், ஊறணி, பொலிகண்டி ஆலடி, இன்பருட்டி, சுப்பர்மடம் ஆகிய இடங்களில் வான் தோண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இவ் வான் தோண்டும் வேலைக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது இவ்வேலைகளை அவ்வப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றன. வடமராட்சி வடக்கு - கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வை மேலும்மயிலும் சகல வான் தோண்டும் வேலைகளையும் மேற்பார்வை செய்துவருகின்ருர். [ஸ]

## புதிய பொலிஸ் அதிகாரி

[புலோலி]

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு சந்திரா குணரத்தின இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்

முன்னர் இங்கு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு நிஹால் ஜெயசேகரா ஜ எல பொலிஸ் நிலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ஸ]

## கும்பாபிஷேகம்

[அரியாலை]

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சங்காபிஷேகம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து அன்று இரவு சுவாமியூர்த்தண்டிகை தெருவீதி வந்ததுடன் அடுத்த நாள் மத்தியானம் அன்னதானத்துடன் கும்பாபிஷேக விழா முடிவு பெற்றது.

## ரூ. 3 லட்சம் போதைவஸ்து

புதுடில்லி, ஜூலை 22

பம்பாய் விமான நிலையத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறவிருந்த ஒரு ஜப்பானிய உல்லாசப் பயணியிடமிருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியுள்ள போதைவஸ்து கைப்பற்றப்பட்டது.

# பயங்கரவாதத்தை முற்றாக அழித்து ஒழிக்க பரிபூரண ஒத்துழைப்பு நல்குங்கள்

## எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

**"இந்நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக அழித்தொழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு நீங்களும் உங்களது சகாக்களும் பரிபூரண ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கவேண்டும்"**

**ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அக்கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு:

"எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்களின் குறைபாடுகள்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம் அவற்றின் சிலவற்றை நாம் நீக்கியுள்ளோம். ஏனைய குறைபாடுகளையும், பிரச்னைகளையும் உங்களின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ தீர்த்துவைக்கமுயலுவேன். இன, மத பேதமின்றி இந்நாட்டில் வதியும் சகல பிரஜைகளுக்கும் நீதி வழங்கப்படவேண்டுமென நான் கருதுகிறேன்.

1979 ஜூலை மாதம் 11ந் தேதிய தங்கள்கடிதம்தொடர்பாகத்தான் இதனை எழுதலானேன்.

"எனது தலைபாய, விசுவாசமான தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் நிச்சயமான ஒரு குறிக்கோளை நோக்கிச் செயற்படுமாறு எம்மைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்குமாக இருந்தது எனவும், அதன்பின்னர் "தமிழ்நாட்டினது சுதந்திரத்தையும் இறைமையை மீள நிலைநிறுத்தும், குறித்துரைக்கப்பெற்ற ஆணையை நிறைவேற்றுவதற்கு மாகும்' எனத் தாங்கள் கூறுகிறீர்கள். இச்சொல்லாட்சியினால் தாங்கள் கருதுவதுவிகிதாசாரமாகப் பெருந்தொகையான தமிழ் பேசும்மக்கள்இருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள், புத்தளம் மாவட்டம், மத்திய, சபரகமுவ மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் தனி அரசு ஒன்றினை-பிறவாறுகூறின் "ஈழத்தினை" உருவாக்குதலையாகும். நான் இத்துடன் இணைத்தடக்கும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் 1977இல் வாக்களிக்கப்பெற்றவாங்கினை தாங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களாயின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வாக்குகளில் 72.12 சதவிகிதத்தைத் தாங்கள் பெற்றீர்கள் என்பதையும்! மன்னாரில் 51.58 சதவிகிதத்தையும்; வவனியாவில் 55.99 சதவிகிதத்தையும்; திருகோணமலையில் 27.29சதவிகிதத்தையும்; மட்டக்களப்பில் 32.53 சதவிகிதத்தையும், அம்பாறையில் 21.90 சதவிகிதத்தையும்; புத்தளத்தில் 1.74 சதவிகிதத்தையும் பெற்றீர்கள் என்பதையும் காண்பீர்கள். ஏனைய பிரதேசங்களில் ஓர் அபேட்சகரைத்தானும் தாங்கள் நிறுத்தவில்லை என்பதுடன், தமிழ் பேசும் மக்கள் "ஈழத்"திற்கு எதிராக 'ஒருங்குதிரண்டு'வாக்குமளித்தனர்.

### ஆணைபற்றிய விடயம்

தாங்கள்யாழ்ப்பாண மாவட்டத்தின் மக்களிடமிருந்து ஓர் ஆணையைப் பெற்றுள்ளதாகக் கோரலாம்; வடமாகாணத்தின் மற்றைய இரு மாவட்டங்களிலும் அத்தகைய அறுபெரும்பான்மையைக் கொண்டு, ஓர் ஆணை கிடைத்துள்ளதாகத் தாங்கள் கோர இயலாது. கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் தாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டீர்கள். ஆகவே 'ஈழத்'தை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மட்டும்தாங்கள் மட்டுப்படுத்துகிறீர்களா? அல்லது 'ஈழத்'தை நிராகரிக்குமாறுயாழ்ப்பாணம் தவிர்ந்த இத்தீவு அடங்கலுமிருந்து திட்டவட்டமான ஓர் ஆணையைக் கொண்டுள்ள ஓர் அரசாங்கத்துடன் தாங்கள் இணக்கப் பேச்சுவார்த்தைகள் நடாத்த முனைவது வடக்கு, கிழக்குமாகாணங்களில் எல்லா மாவட்டங்களையும், அத்துடன் இம் மாகாணங்களுக்குப் புறத்தேயுள்ள சில மாவட்டங்களையும் கொண்டமைந்த ஓர் 'ஈழத்'தை நிறுவுவதற்காகவா?

த.ஐ.வி.முன்னணி வடமாகாணத்திலுள்ள ஒவ்வோர் ஆசனத்தையும் வென்றெடுத்ததென்பது உண்மை. எவ்வாறு விலும், வவனியாவிலும் முல்லைத்தீவிலும் போட்டியிட வேண்டாமென எனது கட்சியை இணங்கவைக்குமாறு கோரி, தங்கள்கட்சியின் உறுப்பினர்கள் என்னைக்கண்டது தங்களுக்கு நினைவிருக்கலாம். வவனியாவைப் பொறுத்தவரை என்னால் உடன்பட முடியவில்லையாயினும், முல்லைத்தீவுக்கு ஓர் அபேட்சகரை நிறுத்தினேனல்லன். நாங்கள் அவ்வாறு நிறுத்தியிருந்தோமாயின் விளைவு வேறுவகையாகவிருந்திருக்கும்.

தங்கள் கட்சி உறுப்பினர்களை அமைச்சரவையில் சேருமாறும், மாவட்ட அமைச்சர்களாகப் பதவியேற்குமாறும் நான் அழைத்தேன். தாங்கள் பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் முதலிய நாடுகளுக்குச் சென்றிருந்தபோது உவாட்பிளேஸிலுள்ள எனது இல்லத்தில் தங்கள் பாராளுமன்றக் குழுவின் சில உறுப்பினர்கள் என்னைக்கண்டு. நீங்கள் மீண்டுவந்ததும் ஏற்புடைதா அல்லவா எனச்சீர் தூக்கிப் பார்க்கும்பொருட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ளமாவட்ட அமைச்சர் பதவிகளிற் சில அவர்களுக்கென வெற்றிடமாக வைத்திருக்கப்படும் என வேண்டிக்கொண்டனர். நான் அவ்வாறே செய்தேன், ஒரு சொற்பகாலத்திற்கு முன்பு தான் அவற்றை நிரப்பினேன்.

தாங்கள் அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும் கண்டித்துள்ளீர்களெனநான் கூறவில்லை. தாங்கள் அவ்வாறு செய்தது இந்நாட்டிற்கு வெளியேயென்றுதான் நான் கூறினேன்; இதனை எதிர்க்கட்சித் தலைவர் எவராவது கடந்த காலத்திற் செய்ததுமில்லை. எதிர்காலத்தில் செய்யவும் மாட்டாரென நான் நம்புகிறேன். இந்நாட்டுமக்களில் மிகக்குறைவானதோர் சிறுபான்மையினரைத் தாங்கள் பிரதிநிதித்துவம் படுத்துகின்றபோதிலும், இலங்கைக்குடியரசிற்கு விசுவாசமுள்ளவராக இருப்பீர்களெனவும், அத்துடன் "எனது திறமைக்கு இற்றைவரை ஒற்றையாட்சி அரசொன்றாகிய "இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக்காப்பேன்" எனவும் தாங்கள் சத்தியப்பிரமாணம் செய்துளளபோதிலும் தாங்கள் பாராளுமன்றத்தின் உள்ளும், பாராளுமன்றத்தின் வெளியேயும், மேலும் மோசமாக இந்நாட்டிற்கு வெளியேயும் ஒரேசீராக தங்கள சத்தியத்தை மீறியுள்ளதுடன் பிரிவினையைப்பற்றிப் பேசியுமிருக்கிறீர்கள்.

### தமிழ் மக்களின் குறைகள்

தமிழ்மக்களின் மனக்குறைகளை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்பதுடன் அவற்றுட் சிலவற்றிற்குப் பரிகாரம்தேடியுமுள்ளேன். இலங்கைப் பிரஜைகள் எல்லோருக்கும் அவர்களது இனத்தையோ மதத்தையோ பொருட்படுத்தாது, நீதிவழங்கப்படவேண்டு மென நான் உணர்கின்றேனாதலால் தங்கள் உதவியுடனோ உதவி இன்றியோ, ஏனையவற்றிற்கும் பரிகாரம் தேடுவேன்.

### கல்வி

பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் இன அடிப்படையில் புள்ளிகள் தரப்படுத்தலை இவ் அரசாங்கம் நீக்கியுளளதென்பதை தாங்கள் ஒத்துக்கொள்கிறீர்கள். முழுச்சனத்தொகையினதும் இன விகிதங்களுக்கு இயைய உள்ளபடியான புள்ளிகளின்அடிப்படையில் மாணவர்களை அனுமதித்தலைத் தாங்கள் எதிர்க்கின்றீர்கள். பல்கலைக்கழக அனுமதியானது மட்டுப்படுத்தப்படவேண்டியிருப்பதால், இம்மட்டுப்படுத்தல் எவ்வாறு செயற்படவேண்டும் எனும்பிரச்னை எழுகின்றது. மட்டுப்படுத்தலானது இன அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ இருத்தலை அரசாங்கம் எதிர்த்தது. மேற்கொள்ளப்படும் புதிய விதிமுறையானது அனுமதிப்பங்குகளை முழுத்தீவிற்கும், பின்னர் மாவட்டங்களுக்கும், இறுதியில் வவனியா, மட்டக்களப்பு மொனறாகலை போன்ற அபிவிருத்திகுறைந்த பிரதேசங்களுக்கும் ஒதுக்கி, தனிப்பட்ட, உள்ளபடியான புள்ளிகளின் அடிப்படையில் அனுமதிகளை மட்டுப்படுத்த முனைந்தது. தகுதிவாய்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு நீதிமறுக்கப்பட்டுள்ளது எனத்தாங்கள் கூறுகிறீர்கள். எல்லா இனங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கு இது ஏற்புடையதாகவிருக்கிறது. திறந்த பல்கலைக்கழகங்களையும், அங்கீகரிக்கப்பெற்ற நிறுவனங்களைப் பல்கலைக்கழகங்களாகவும் அங்கு ரார்ப்பணம் செய்தல்வாயிலாக இதற்கான பரிகாரத்தை நாங்கள் நாடுகிறோம்.

(4-ம் பக்கம்பார்க்க)

---

## மக்கள் கருத்து

### ஆசிரியர் பற்றுக்குறையும் தற்காலிக அதிபர்களும்

நாடெங்கிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளில், ஆசிரியர் பற்றாக்குறையும்- அதிபர்கள் நியமனமின்றித் தற்காலிக அதிபர்களுடனும் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி அல்லோலகல்லோலப்பட்டு வருகின்றது ஏழு மாதங்கள் முடிந்தும் இத்தகைய நியமனங்கள் இன்னமும் நடைபெறுமலிருப்பது கவலைக்குரியதொன்றாகும்.

பல கல்லூரிகளிலும் கூட இன்னமும் தற்காலிக அதிபர்களே கடமையாற்றிவருகின்றனர். சில கல்லூரிகளிலும் கடந்த ஏழு, எட்டு வருடங்களாக நிரந்தரமாக்கப்படாது கடமையாற்றுகின்றனர். இவர்களால் தாம் செய்யும் கடமைக்கேற்ற - அதிபர் பதவிக்கான சம்பளத்தையும் பெறமுடிவதில்லை.

ஆசிரியர் பற்றுக்குறையை இருக்கும் ஆசிரியர்களை வைத்துச் சமாளித்தாலும் அதிபர்களின்றிப் பாடசாலைகள் நடைபெற்றுவருவது எற்கும் பிள்ளைகளின்கல்விக்கும் பெருங்குந்தகம் ஏற்படுவதாகும்.

1977ம் ஆண்டு 4ம், 5ம் அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பகிரங்க பரீட்சையொன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்பின் 1978 மார்ச்சில் பரீட்சை நாடெங்கும் நடைபெற்றது பரீட்சையில் சித்தியடைந்தோர் கொழும்புக்கு அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சையையும் கல்வித் திணைக்களம் நடாத்தியது. நேர்முகப் பரீட்சை நடந்து முடிந்து 8 மாதங்களாயினும் இன்னமும் நியமனம் எதுவும் நடைபெறுதிருக்கின்றது.

இதேபோன்றே தரம் 2, 3 அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்று முடிந்தன பல ஆண்டுகளாகத் தற்காலிக அதிபர்களாக இருப்போர் இந்நேர்முகப்பரீட்சைக்குத் தோன்றி- நிரந்தரப் பதவிக்கான கடிதத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றனர்.

4ம், 5ம் தர அதிபர்நியமனங்கள் யாழ். மாவட்டத்துக்கு வெளியேயே கோரப்பட்டன அந்த நியமனங்களை ஏற்றுச் செய்வதற்கு ஆசிரியர்கள் ஆயத்தமாக இருந்தும் இன்னும் நியமனம் மூடுமந்திரமாகவே இருக்கின்றது.

சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னரும் வெளி மாவட்டங்களுக்கே அதிபர்கள் நியமனம் பெற்றுச் சென்றனர். இவர்களில் பலர் ஏற்கெனவே வெளி மாவட்டங்களில் கடமை பார்த்துள்ளனர். அப்படியிருந்தும் பதவி உயர்வை விரும்பி வெளி மாவட்டங்களுக்குச் சென்றும் 6 ஆண்டுகளாக சொந்த மாவட்டங்களுக்கு மாற்றம்பெற்று வர முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

புதிய நியமனங்களின் பின்னரே இவர்கள் சொந்த மாவட்டங்களுக்கு வரமுடியும் என இப்போது நம்பப்படுகின்றது.

இந்த நிலையை ஆசிரிய தொழிற்சங்கங்கள் அரசுக்கு எடுத்துக்காட்டி இந்நியமனங்கள் விரைவில் நடைபெற உதவுவார்களாக!

ந. சிவபாதம்,
"புத்தொளி"
அ. மி. த. க. பாடசாலை,
ஆனைக்கோட்டை.

---

## புதிய சமாதான நீதிபதி

[புலோலி]

பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் இவகுருநாதன் பருத்தித்துறை நீதிபரிபாலன பகுதிக்குச் சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். கே. யோகரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார்.

பருத்தித்துறை தபால்நிலைய தரம்பிரிப்பாளராகக் கடமையாற்றிவரும் இவர். புலோலி மேற்கு நம்பசெட்டி தண்ணீர்மதவடி வயிரவர்கோவில் தர்மகர்த்தாவாகவும், பருத்தித்துறை ஸ்ரீசமுண்டேஸ்வரி அம்மன்கோவில் பரிபாலனசபை உபதர்மகர்த்தாவாகவும்பணியாற்றி வருவதுடன், சமூகசமயப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டுழைத்தும் வருகின்றார். (ஈ)

## 133 பேருக்கு போனஸ்

[நெல்லியடி]

பருத்தித்துறை- புலோலி தெங்கு-பனம் உற்பத்தி விற்பனவுச் சங்கம் தமது ஊழியர்கள் 13 பேருக்கு போனஸ் பணம் வழங்கியுள்ளது.

கூடுதலாக சங்கத்திற்கு கள் வழங்கியவர்களுக்கும் இப் போனஸ் பணம் வழங்கப்பட்டுள்ளது

## மருந்து தட்டுப்பாடு

[நெல்லியடி]

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் "டெக்ஸேன்" என்ற மருந்திற்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு அவசரகாலத்தில் பயன்படுத்தப்படும் இம்மருந்து தனியார் வர்த்தக நிலையங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இம்மருந்துகளைப்போலவே 'பண்டேஜ்' துணிக்கும் தட்டுப்பாடு காணப்படுகின்றது. காயங்களுக்கும் மற்றும் நோய்களுக்கும் மருந்துபெறச் செல்லும் நோயாளிகள் 'பண்டேஜ்' துணி அல்லது சேலைத் துணி கொண்டுவருமாறு ஆஸ்பத்திரி ஊழியர்கள் பணிக்கின்றார்கள். (ஈ)

## பயிற்சி வகுப்பு

(வேலணை)

இலங்கை தேசிய சுயரோகத் தடுப்புச் சங்கத்தின் வேலணைக் கிளை இம்மாதம் 28, 29ம் திகதிகளில் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபரும். இளைத் தலைவருமான திரு. மு. தம்பிமுத்து தலைமையில் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளது.

மேற்படி இப்பயிற்சி வகுப்பில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. என். சிவராசா, யாழ். பிரதேச சுகாதாரப் போதனாசிரியர் திரு. க. வைத்தீஸ்வரன், இ. தே. க. த. சபை சுகாதார கல்வி உத்தியோகத்தர் திரு. ஞ. நடராசன், மன்னார் கச்சேரி கிராம முன்னேற்றச் சங்க மேற்பார்வையாளர் திரு பொன். மாணிக்கவாசகர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (ஈ)

### இந்திய அரசியலில் திடீர் திருப்பம்

# சரண்சிங், ராஜ்நாராயணை சந்திரசேகர் சந்தித்தார்

## மீண்டும் ஜனதா ஆட்சிபீடம் ஏறும் என்கிறார் அவர்

புதுடில்லி, ஜூலை 22
இந்திய அரசியலில்நெருக்கடி தொடரும் வேளையில் புதிய திருப்பம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் எதிர்பாராத வகையில் இன்று 'ஜனதா-எஸ்' கட்சியின் தலைவர் திரு. சரண்சிங்கையும், அக்கட்சியை உருவாக்கிய முன்னாள் சுகாதார அமைச்சர் திரு ராஜ்நாராயணையும் சந்தித்து ஆட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்தார்.

திரு. சந்திரசேகர் காலையில் திரு சரண்சிங்கையும் பகல் திரு. ராஜ்நாராயணையும் சந்தித்தார்.

### மதுலிமாயி தேசாய் சந்திப்பு

இதேவேளையில் சரண்சிங்கின் நெருங்கிய சகாவான திரு. மதுலிமாயி இன்று காபந்து பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

### பேச்சு தொடங்கிறது

இது இவ்வாறிருக்க, அரசு அமைக்க நாலைவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ள உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சிக்கும் 'ஜனதா எஸ்' கட்சிக்குமிடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

### ஜெகஜீவன் அர்ஸ் தொலைபேசி சந்திப்பு

துணைப்பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் கர்நாடக முதலவர் திரு. தேவராஜ் அர்ஸுடன் தொலைபேசியில் பேச்சு நடத்தினர்

காங்கிரஸ் சார்பில் திரு. ஸி சுப்பிரமணியமும் திரு அர்ஸுடன் தொலைபேசியில் பேசினர்

திருவாளர்கள் சரண்சிங்கையும் ராஜ்நாராயணையும் சந்தித்தபின்னர் பத்திரிகை நிருபர்களிடம் பேசிய திரு சந்திரசேகர் குழப்பம் மேலும் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்

எதுவித குழப்பம்ஏற்பட்டாலும் மீண்டும் ஜனதா கட்சியே ஆட்சிக்கு வரும் என்றும் அவர் கூறினர். [இ]

## புதுச்சேரி தேர்தல் காலவரையின்றிஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை 22
அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெற இருந்த பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் திரு. எஸ் எல் சக்தர் தெரிவித்துள்ளார்.

திரு சக்தர் புதுடில்லியில் கூட்டிய அரசியல் கட்சித் தலைவர்களின் மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

மத்தியில் அரசியல் ஸ்திரமற்றநிலை காணப்படுவதாலேயே இத்தேர்தல் ஒ[த்தி]வைக்கப்படுவதாகவும் திரு சக்தர் தெரிவித்தார்.

பாண்டிச்சேரியில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி காரணமாக கடந்த மே மாதம் 12ம் திகதி சட்டசபை கலைக்கப்பட்டு அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்பட்டது தெரிந்ததே. [இ]

# பயங்கரவாதத்தை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### குடியேற்றம்

காணி உரிமை நிர்ணயம் என நான் இதனை அழைக்க விரும்புகிறேன் இப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டியுள்ளது

### தமிழ்மொழிப் பிரச்னை

தற்போதுள்ள பிரச்னையாதெனில், தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டனவும், 1956 முதல் எந்த அரசாங்கத்தினாலும் விட்டுக்கொடுக்கப்படாதனவுமான அரசியலமைப்பின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தலாகும். ஒரு தமிழ் அமைச்சரும் தங்களது கட்சியின் முன்னணி உறுப்பினருமான ஒருவரே இச் செயற்படுத்தலுக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

### தொழில் வாய்ப்பு

இந்த ஒரேயொருதுறையிற் தான் தாங்கள் கூறுவது சரியாகும். த ஐ வி முன்னணியின் 17 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 1,000 தொழில் வங்கிப் படிவங்கள் வீதம் அரசாங்கம் வழங்கி, அவற்றை அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களின் படிவங்களாக ஏற்றுக் கொண்டது, தொழில் வங்கி நியமனங்கள் 1979, ஜனவரி மாதத்திலிருந்து மாத்திரமே வழங்கப்பெற்றன. அத்தருணம் தங்கள் கட்சி தனி அரசைக் கோரி நின்றமை அதன் பிரசாரத்தில் அவ்வளவு உக்கிரமாகவும் அவ்வளவு தெளிவாகவும் இருந்த படியால் அரசாங்க ஊழியர்களாக, தங்களால் நியமிக்கப்பெற்றோரை தெரிவு செய்வது அபாயகரமானதென அரசாங்கம் உணர்ந்தது ஆகவே த ஐ வி முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்படைக்கப்பெற்ற தொழில் வங்கிப் படிவங்களினின்றும் மிகச் சிலவே தெரிவு செய்யப்பெற்றிருந்தன. த ஐ வி முன்னணிப் பிரமுகர்களால் ஒப்படைக்கப்பட்டிருந்த நிரல்களுக்குப் புறம்பாக விண்ணப்பக்காரர்களை நியமித்தல் மூலம் இந்நிலைமை தற்பொழுது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

### அஹிம்சைக் கொள்கை

தாங்கள் அஹிம்சைக் வாய்ந்த காந்தியக் கொள்கைப் பற்றுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாயினும், தங்கள் கட்சியின் உறுப்பினரொருவர் அரசாங்கத்துடன் சேர்ந்தமைக்காக அவரையும், தமது கடமைகளைச் செய்து கொண்டிருக்கும் அநேக பொலிஸ் அலுவலர்களையும், மிக அண்மையில் நிகழ்ந்த சம்பவமான தமது வாயிற்படியில் உட்கார்ந்திருந்தபோது மடுபாதகமாகக் கொல்லப்பட்ட பரிசோதகர் குருசாமியையும் சுட்டமையை தாங்கள் ஒருபோதும் கண்டித்ததில்லை. இக்கொலையை அங்கீகரிக்கவில்லையென்பதையிட்டுச் சுருதத் தெரிகிறமாறு உங்கள் உறுப்பினர்களிற் சிலர் பத்திரிகையாளர்களால் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தனர் என நான் அறிகிறேன். திரு. பஞ்சு ஒறியின் மீதான தாக்குதலைக் கண்டிப்பதில் அவசரப்பட்ட அவர்கள் இதனைச்செய்யவில்லை

இப்பயங்கரவாதச் செயல்களுக்கு மௌனமான தங்கள் அங்கீகாரமுண்டு என இலங்கை மக்கள் நினைப்பதையிட்டு தாங்கள் அவர்களைக் குறைகூற முடியாது. தாங்கள் பின்பற்றுவதாக வெளிப்படக் கூறும் கொள்கைப்பற்றுக்கு உரியவரும், வன்செயலைக் கண்டித்ததுமட்டுமன்றி குறிப்பிட்ட வன்செயற் சம்பவங்களையும் கண்டித்தவரான மகாத்மாகாந்தியிலிருந்து எவ்வளவு வேறுபட்டதிது. பண்டிதர் ஜவஹர்லால் நேரு போன்ற மற்றைய இந்தியத் தலைவர்களால் வெற்றியீட்டும் தறுவாயில் இருந்ததெனக் கூறப்பெற்ற 1922 இன் அஹிம்சைச் சத்தியாக்கிரக இயக்கத்தின் உச்சக்கட்டத்தில் பொலிஸ் அலுவலர்களின் கொலை, சௌறி சௌறாவில் பொலிஸ் நிலையமொன்று எரிக்கப்பட்டமை காரணமாக அவர் இச்சம்பவங்களைக் கண்டித்ததுமாத்திரமன்றி, முழு இயக்கத்தையுமே இடை நிறுத்தி 1930 ஆம் ஆண்டுத் தொடர்வரை அதனை மீளவமைக்காதும் விட்டார்.

1920 ஆம் ஆண்டில் காந்திஜி எழுதிய 'வாளின் கோட்பாடு' என்னும் பெயர்பெற்றகட்டுரை ஒன்றில் 'சின் பெய்னிஸம்' இலிருந்து இவ் ஒத்துழையாமையை நான் வேறுபடுத்துகிறேன். ஏனெனில், வன்செயலுடன் இணையிணையாக முன் வைக்கப்பட இயலாவகையில் இது கருத்திற்கொள்ளப்படுகிறது. எனினும் இவ்வன்செயலின் பாற் பற்றுடையோரைத்தானும் இவ்வமைதிவாய்ந்த ஒத்துழையாமையை ஒருமுறை பரீட்சித்துப்பார்க்குமாறு நான் அழைக்கிறேன். அதனுள் இயல்பாகவே பொதிந்துள்ள பலவீனம் காரணமாக அது தோல்வியுறாது. பற்றுச் செயல் மிகக் குறைவானமை காரணமாக அது தோல்வியுறலாம் அவ்வேளைதான் உண்மையான ஆபத்துத் தருணமாகும். தேசியமட்டத்தில் மேலும் சிறுமைக்கு ஆளாக இயலாத உயர் நோக்குடைய மனிதர்கள் தமது கடும் சினத்தைக் காட்ட விழைவர். அவர்கள் வன்செயலில் இறங்குவர். நான் அறிந்தமட்டில், இழைக்கப்பட்ட தவறிலிருந்து தம்மையோ தமது நாட்டையோ விடுவிக்காது அவர்கள் அழிதல் திண்ணம். இந்தியா வாளின் கோட்பாட்டை மேற்கொள்ளின் அந்நாடு அப்போதைக்கு வெற்றியீட்டலாம். அப்போது இந்தியா எனது இதயத்தின் உயரிடத்தினின்றும் அற்றுப் போகும். எனது அனைத்தையும் நான் இந்தியாவிற்குக் கொடுக்கக் கடப்பாடு உடையேனுதலால் நான் இந்தியாவுடன் இணைபிரியாதிணைந்துள்ளேன். உலகிற்கு மாட்டு குறித்ததொரு பணியை நிறைவேற்றும் பொறுப்பு இந்தியாவிற்கு உண்டு என நான் பூரணமாக நம்புகிறேன்."

| | த.ஐ.வி.மு. | த.ஐ.வி.முவுக்கெதிர் |
|---|---|---|
| மன்னார் | 15,141 | 14,211 |
| வவுனியா | 24,082 | 18,930 |
| திருகோணமலை | 23, 664 | 60.388 |
| மட்டக்களப்பு | 55,120 | 1,14,302 |
| அம்பாறை | 39,698 | 1,41,562 |
| | 1,56,705 | 2,49,388 |
| புத்தளம் | 3,268 | 1,84, 426 |
| யாழ்ப்பாணம் | 2,69,070 | 93,428 |

தங்களது மறுப்புரைகளைத் தாங்கள் இதயபூர்வமாகக் கூறுகிறீர்களாயின் தாங்களும் தங்கள் சகாக்களும் இந்நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக அழித்து நீக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் தங்களது பூரண ஒத்துழைப்பினை ஈதல்வேண்டும்.

(இசை,சித்திரம்நடனம் ஆதியன, நுண்கலைகள் என்ற தலைப்பில் இன்றைய பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன இதனுல் கல்வியிலும், வாழ்க்கையிலும் நல்லமாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன இதுபற்றி கல்லூரி ஆசிரியர் எழுதுகிறார்)

# புதிய பாடவிதானத்தில் நுண்கலை!

## கு. கனகலிங்கம்

பலஆண்டு காலமாக மாறாத் தன்மையுடன் இருந்து வந்தபாடவிதானங்கள் கடந்த சில ஆண்டுகளுக்குமுன் ஓரளவு மாற்றமடைந்துவிட்டன. எமது ஈழத்தின் நுண்கலைகள் புத்துயிர் பெற்றுவிடத்தொடங்கிவிட்டன அன்றைய பாடவிதானத்தில் நமது கலை, கலாச்சாரங்களை வளர்க்கும் வாய்ப்பும் சூழ்நிலையும் நமக்குப் பொருத்தமாக இருக்கவில்லை. இன்று நமது குழந்தைகள் சுதந்திர ஈழவழநாட்டில் வாழும் வாய்ப்பினைப்பெற்றுள்ளனர். கல்வியிலும் நல்ல மாற்றங்கள் பல உண்டாகி இருக்கின்றன. இதுவரையும் இருந்துவந்த வாழ்க்கைக்கு உதவாத ஏட்டுக்கல்வி ஒழிக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கையை மரைச்செய்து, அதனை வளம்பெறச்செய்யும் கலைகளின் சிறப்பினை உணர்ந்து அவற்றினை வளர்க்கவும் தலைப்பட்டுவிட்டனர்.

இசை, சித்திரம், நடனம் ஆதியன, நுண்கலைகள் என்ற தலைப்பில் இன்றைய பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன. முன்பு இவை தனித்தனியாகத் தொடர்பற்ற முறையில் இருந்துவந்தன. இதனுல் ஒரு மாணவனின் கலைத்திறன் ஒடுக்கப்பட்டுவந்திருக்கின்றது. இம்மூன்றுகலைகளிலும் ஏதாவதொரு தனித்திறன்படைத்த பலர் சித்திரம் கீறுவதில் முதிர்ச்சிபெற்றவர்கள் நடனக்கலையில் மேம்பட்ட இன்னும் பலர் இருந்தும் அவர்கள் தம்பயனை தமது நாட்டிற்கு ஈந்துவிடமுடியாமல் மறைக்கப்பட்டும் தடைப்பட்டும் வந்திருக்கின்றனர். ஏனெனில் இந்த இசை,சித்திரம் நடனம் என்ற பாடங்களின் உண்மைத்திறன் குறைக்கப்பட்டிருந்தமையேயாகும் இன்றும் அன்றும் சரி பிள்ளைகளை படிப்பிக்கவிரும் எந்தப் பெற்றோரும் பிள்ளையின் ஆற்றலுக்கும் நாட்டிற்கும்மதிப்பளிக்காது தமது மக்கள் ஒரு விஞ்ஞானப்பட்டதாரியாய் வந்துவிடவேண்டும். பொறியியலாளராகிவிட வேண்டும், வைத்திய நிபுணராகிவிட வேண்டும் என்ற நோக்குடன் தான் படிப்பித்து வந்தனர் இத்தனைக்கும் ஈடாகி கல்வி பயின்றுவந்த பிள்ளைகளும் அதற்குரிய பாடங்களையே பெற்றோரின் விருப்பப்படியே விரும்பிப் பெரிதும் தெரிந்து பயின்றுவந்தனர். இவையும் ஒரு குறிப்பிட்ட சாராருக்கே பயனுடைத்தாயிற்று. ஏனையோர் இடையில் கற்றலை நிறுத்திவிட்டனர். சமூகத்தின்மத்தியில் இடைப்பட்ட காலத்தில் நுண்கலை பயின்றவர்களும் பயிற்றுநர்களும் மதிப்பிற்குரியவராகக் கணிக்கப்படவில்லை. நுண்கலையில் ஆர்வமுடைய பிள்ளைகளும் தமது நாட்டத்திற்கு மாறாக பாடங்களை அமைத்திருந்ததால் பாடசாலையிலிருந்துவிலகினர் இதனுல் நுண்கலைகள் நிலை மறைவாயின.

காலத்துக்குக்காலம் மாறிவரும் கல்வித்திட்டங்களில் நுண்கலைகள் வெகுவாக முக்கியத்துவம் பெற்றதென்றால் புதியகல்வித்திட்டத்தில் மட்டுந்தான். இதுவரைகாலமும் வளர்ச்சியின்றி ஒழிந்திருந்த கலைகள் இன்று புத்தொளி பெற்றுப் புதுவாழ்வு வாழ புதிய பாடவிதானம் வழிவகுத்திருக்கின்றது ஒவ்வொரு பிள்ளையினிடத்தும் ஒவ்வொரு கலைத்திறன் இருக்கின்றது இசையில், ஓவியத்தில், நடனத்தில் இம்மூன்றில் ஒன்றிலேனும் ஒருபிள்ளை ஆற்றலுடையதாக இருக்கின்றது என்பதை இன்றைய பாடவிதானம் நிரூபித்துவிட்டது.

எல்லாக் கலைகளும் மக்கள் உணர்வையும் வாழ்வையும் உயர்த்தக் கூடியவை என்றும் விலங்கு, பறவை ஊர்வன, நீர் வாழ்வன,மரம் செடி கொடி ஆகிய பல்வேறு உயிரினங்களையும் ஒருங்கே தன்வயப்படுத்தும் தன்மை வாய்ந்தவையாய் விளங்குவனவற்றில் இசைக்கலையும் ஒன்று.

[5-ம் பக்கம் பார்க்க]

றியோ போன்: 7607
[நகரமண்டபம்]
தினசரி: 10-30, 4-45, 7 00, 9-30
PERCY
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி ஆர் - பானுமதி
மதுரை வீரன்

வெலிங்டன் தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

ஸிடோ போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

3-வது ஜனத்திரள் நிறைந்த வாரம்!
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, & 7-00
CHARLES BRONSON in
Mr. MAJESTYK-
Adults - Action Packed - Color
Don't miss this action Packed movie
NEXT ATTRACTION 'Juggernaut' Color Suspense Thriller

கடைசி சில தினங்கள்மட்டும்
ஸ்ரீதர் தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45
(யாழ்ப்பாணம்)
மூன்று "ஒஸ்கா" பரிசுகள் பெற்றது.
சிறந்த நடிகன் என்ற பாராட்டுப்பெற்ற மர்லின் பிராண்டோ நடித்த சிறந்த படங்களுக்கான பரிசைப்பெற்ற
THE GOD FATHER
(Adults Only - வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

4-வது வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

98வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா தினசரி 4 காட்சிகள்
யாழ் நகர்
எம்.ஜி ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன் கலர்

கடைசி சில தினங்கள்
வின்சர் போன்: 466
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ் நகர்) இன்றுமுதல்
ஜெமினி, சாவித்திரி, நாகேஸ்வரராவ், தங்கவேலு அஞ்சலி
மாதர்குலமாணிக்கம்

REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a. m.
RICHARD BENJAMIN
in
M.G.M's
THE SUNSHINE BOYS
(color)
Coming soon OMEN

# இன்றைய பலன்

ஆடிமாதம் 7-ம் திகதி
[திங்கட்கிழமை]
(23-7-1979)

**மேடம்:** பல காலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும். இலருக்குபுதிதாகத் தொழில் கிடைக்கக் கூடும். வருவாயும் வளரும்.

**இடபம் :** பல வழிகளிலும் பணவரவுக்கு இடமுண்டு. வழக்கறிஞர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமானதினம். பிள்ளைகள் மூலம் பெருமைதரும் சம்பவம் நடைபெறும், வரவேற்க வேண்டியநாள்.

**மிதுனம்:** முன்னேற்றப் பாதையில் இருப்புத்திரை தொடங்கவிடப் பட்டிருக்கின்றது. அதிக அலைச்சலுக்கும் இடமேற்படலாம், உடல்நலம் சிறிதுபாதிக்கப்படலாம், வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

**கடகம்:** உள்ளத்தின் அடித்தளம் ஊமைக்கண்ணீர் வடிக்கும். வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும். குடும்பத்தில் தொல்லைகளுக்கு இடமுண்டு. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

**சிங்கம் :** வாசித்தை ஜாலம் செய்வதில்வல்லவராகக்காட்சியளிப்பீர்கள். பொதுஜனத் தலைமைக்கும் இடமுண்டு. துரிதவேகத்தில் ஒரு சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்படலாம். சுவையான நிகழ்ச்சியுண்டு.

**கன்னி:** சிறிவருங்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். கிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். இலருக்கு எதிர்பாராதவிதமாக உடல்நலம் பாதிக்கப்படலாம். பொறுமை வேண்டும்.

**துலாம்:** பொன்னான சந்தர்ப்பமொன்று இன்றுகிடைக்கும். திறமைக்கு முதலிடமுண்டு. பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். இதயச்சுமை அகலும். தொழில்துறையில் புதிய வெற்றியுண்டு.

**விருச்சிகம்:** வாழ்க்கை மந்தகதியில் நடைபெறும். எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும். சகோதரவழிமூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம். உடல்நலத்தைப் பேணவும்.

**தனுசு:** நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசித புத்தியினால் எதையும் சமாளிக்கலாம்.

**மகரம்:** புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். குடும்ப வாழ்க்கை இன்று கற்கண்டு போல் இனிக்கும்.

**கும்பம் :** அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன் கையே தனக்குதவி என்று செயலாற்றவும். மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றிதரும்.

**மீனம்:** உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்பு தென்படும். இலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கு இடமுண்டு. பெரியவர் ஒருவர் கைகொடுத்து உதவுவார்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

நாகம்மாள் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
இன்றுமுதல் 25ந் திகதிவரை
ஜெமினி-சாவித்திரி
மனிதன் மாறவில்லை

## புதிய...

[4ம் பக்க தொடர்ச்சி]

'சேட்டு விலங்குறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்
என்றுரைப்பார்'

என்ற ஆன்றோர் வாக்கு இங்கு நோக்குவோம். மக்கள் தமது வாழ்வில் இன்ப துன்பங்களில், இசையைப் பெரிதும் விரும்புகின்றனர் தமிழன் வாழ்வு பிறப்பு முதல் இறப்பு வரையும் இசையோடு இணைந்திருப்பதைக் காண்கிறோம். தாலாட்டுப் பாடல் கேட்டுப் பிள்ளை நித்திரையை அணைத்துக் கொள்கிறது. கும்மி கோலாட்டம் அடித்து மகிழும் சிறுவர் அவற்றுடன் இசை கலந்து பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர்.

இங்ஙனம் மாணவர்களின் உள் உணர்ச்சியினின்றும் மொழி வடிவில் வரும் இயற்றமிழ்ச் செய்யுள்களை இசையூட்டி தாளம் அமைத்துப் பாடிஇன்புறுவதற்கு இசையே அன்றி வேறு உதவுவது எது? இசைக்கலையை தம்மொழிப் பகுதியாக்கியும் வாழ்க்கையோடு பொருத்தியும் வளம் பெறச்செய்ய புதிய பாடவிதானம் வரவேற்கின்றது.

இசையோடு பாட்டுக்கள் பாடிவிட்டால்மட்டும் கலையின் சுவைமுடிந்துவிடவில்லை. அந்த இசையோடு சேர்ந்து ஆடலும் இடம்பெற்றுவிட்டால் இன்பத்திற்கு எல்லையே இல்லை இசையின்றி நடனமில்லை. ஆட்டமின்றி இசை இல்லை. மாணவர்கள் இசையோடு குனிப் பாடல்களைப் பாடும்பொழுது அவர்கள் தம்மை மறந்து அபிநயம் பிடிக்க முனைகின்றனர். அவர்களின் பாடல்கோடு இணைந்து நடனமும் கலக்கும்பொழுது பிள்ளைகள் அடையும் மகிழ்ச்சி எண்ணடங்கா. பிள்ளைகள் இசையோடுபாடி, இன்பமாக ஆடிப் பாடி பாடல்களைப் படிக்கிறார்கள். தாங்களும் அபிநயம் காட்டித் தமது இன்ப நுகர்ச்சியைப் பெறுகின்றனர் இவற்றிற்கெல்லாம் துணைபுரிவது இப்புதிய பாடவிதானத்தில் நுண்கலை இன்றியமையாததாய் இடம்பெற்றதன்றோ.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற பழமொழிக்கு முற்றிலும் மாறுபட்டதாக ஒருபுதிய உருக்கொண்டு இருக்கின்றது சித்திரபாடவிதானம் பிள்ளையின் சிந்தனையில் எழுகின்ற எதுவானாலும் வரைந்துவிட்டால் அது ஒரு சித்திரம் தான். முன்பு சித்திரபாடத்தில் கூட பிழை, சரி என்ற குறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட உபகரணங்களைப் பாவித்துத் தான் நிறந்திட்டலாம் என்ற கட்டுப்பாடு இருந்தது இந்த விதிபொருளாதாரம் படைத்த பிள்ளைகள் தான் பெரிதும் பயனடையக்கூடியதாய் இருந்தது. இன்னிலைமை மாறி யாவரும் மகிழ்வுடன் கற்கக் கூடியளவில் இன்றைய பாடவிதானம் வழிவகுத்துவிட்டது. அஃதாவது கரித்துண்டுகள், நிறப்பூக்கள், நிறமண்கள் போன்ற எளிவுப்பொருட்களினூலேயே வரையவோ வர்ணம் தீட்டவோ முடியும் பிள்ளை தனது இயல்பிற்கேற்ப எப்படியும் வரையலாம். நிறந்தீட்டலாம். புதியமுறையின்படி பிள்ளை வரைந்த படத்தைக்கொண்டே பிள்ளையின் இயல்பு, கவனம், உளப்பகுப்பு, உற்றுநோக்கல் போன்றவற்றை அறியக் கூடியதாய் இருக்கின்றது உதாரணமாக ஒரு பூனையை மூன்று பிள்ளைகள் வரைகின்றனர். இவர்களுள் ஒருவர் பூனையின் கண்ணைப் பெரிதாகவும் அடுத்தவர் பூனையின் செவியைப் பெரிதாகவும் அடுத்தவர் பூனையின் மீசையைப் பெரிதாகவும் வரைகின்றனர். இதிலிருந்து ஒவ்வொரு பிள்ளையும் வெவ்வேறு கோணத்தில் பூனையை உற்றுநோக்கி இருக்கின்றனர்

## புதியசங்கம் உதயம்

[நெல்லியடி]

பருத்தித்துறைத்தொகுதியின் அபிவிருத்தியைக்கருத்திற்கொண்டு பட்டதாரிகளால் புதியதொரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 'தேசிய அபிவிருத்திச் சங்கம்' என இச்சங்கத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தொகுதியிலுள்ள பட்டதாரிகளால் ஆரம்பிக்கப் பட்டுள்ள இச்சங்கம், தொகுதியிலுள்ள பயன்படுத்தப்படாத வளங்களைப் பற்றி தகவல்களைத் திரட்டி, அதனை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## ஆவுஸ்திரேலியாவில் பயிற்சி பெறுவார்

[புலோலி]

கிளிநொச்சி நீதவானாகக் கடமையாற்றிய திரு எஸ். இராஜநாதன் மாவட்டநீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி வந்த திரு. எம் டி யேசுரத்தினம் குடும்ப நீதிமன்றத் துறையில் பயிற்சி பெறும் பொருட்டு நீதியமைச்சினால் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். [ஈ]

## சைவசமய பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் திருமுறை மன்றத்தின் 2 வது ஆண்டுச் சைவசமய பாட, பண்ணிசை வகுப்புக்களை வண்ணார்பண்ணையில் விரைவில் ஆரம்பிப்பதென, மேற்படி மன்றம் முடிவு செய்துள்ளது.

யாழ் மேயர் திரு ஆர் விசுவநாதன், சிவதர்மவள்ளல் க. கனகராஜா ஆகியோரை அழைத்து இதனை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகளை அமைப்பாளரான திரு. இ. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

[ஈ]

## ஈரான் தளபதி ராஜினாமா

[ஈரான்]

ஈரான் ஆயுதப்படைத் தளபதியும், டாலிஸ்மா அதிகரும் ராஜினாமா செய்துள்ளனர்

## பதவி உயர்வும் இடமாற்றமும்

[நெல்லியடி]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமபுரியும் 6 பொறியியலாளர், சாலை முகாமையாளர்கள் ஆகியோருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் 4ந் தரத்திற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்கள். பதவியுயர்வுகள் பெற்றோரில் சிலர் இடமாற்றத்திற்குள்ளாகியுள்ளார்கள். [ஈ]

என்பது புலனாகின்றது. இதனால் ஒரு ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையினதும் இயல்பான ஆற்றலை அளவிடமுடிகின்றது.

நுண்கலைகள் புதிய பாடவிதானத்தில் முக்கிய இடம் பெற்றது. அக்கலைகள் கற்பிக்கும் ஆசிரியர்களையும் முக்கியத்துவம்பெறச்செய்கின்றதன்றோ- ஆடுதல், பாடுதல், வரைதல் போன்ற நுண்கலைகளினூடாகப் பிள்ளைகள் மகிழ்ச்சியோடு கல்வியைக் கற்று எமது ஈழவள நாட்டிற்குச் சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான கலைஞர்களை உருவாக்குவதற்கும்பாலமாய் நுண்கலை புதிய பாடவிதானத்தில் முக்கிய இடம்பெற்றிருக்கின்றமை ஆசிரிய சமூகத்திற்குக் கிடைத்தவரப்பிரசாதமாகும்- இவற்றை நாம் மனப்பூர்வமாக வரவேற்று நுண்கலையை வளர்ப்போமாக.

# 'சமைக்கத்தெரியாதா'என்றார் தாயார்; யுவதி தற்கொலை

[சங்கானை]

தாயின் புத்திமதியைச் சகிக்காத இளம்பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார். இச்சம்பவம் பனிப்புலம் பண்டத்தரிப்பில் நிகழ்ந்துள்ளது.

குணசிங்கம் செல்வநாயகி [வயது 19] என்பவரே இறந்தவராவார். பாட்டியாரான இராசையா பொன்னம்மாவுடன் வழக்கமாகத் தங்கியிருக்கும் செல்வநாயகி சம்பவதினம் தமது தாயார் வீட்டிற்கு வந்தபோது "உனக்கு வயசு வந்தும் இன்னமும் நல்ல மாதிரிச் சமைக்கத் தெரியாதா" எனத் தாயார் வினவினராம். இதனைச் சகிக்க முடியாது பாட்டியின்வீடு சென்று பாட்டியார் வெளியில் சென்ற சமயம் பார்த்து நச்சுத்திராவகம் அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார். பூட்டிய அறையினுள் இவர் பிணமாகக் கட்டிலில் கிடந்தாராம்.

வெளியில் சென்றிருந்தபாட்டியார் பொன்னம்மா வீடு திரும்பியதும் பேத்தியாரைக் காணாமையால் சிலரின் உதவியுடன் வீட்டைத் திறந்து பார்த்தபோது செல்வநாயகி இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இறந்தவரின் தாயாரான குணசிங்கம் பத்மாவதி, பாட்டியார் பொன்னம்மா ஆகியோரின் வாய்மூலத்தைப் பதிவுசெய்த மரணவிசாரணை அதிகாரி திரு கே. சேனாதிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

சாட்சிகளை சங்கானைப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜோர்ஜ் ரூபின்சன் ஆஜர் செய்தார். [அ]

## அரசின் 2-வது ஆண்டு பூர்த்தி:

# யாழ். செயலகத்தில் மரம்நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுமுகமாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மரம்நாட்டு விழா ஆரம்ப நிகழ்ச்சிகளை, யாழ் செயலக வளவில், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், பாதுகாப்பு ஆலோசனை அதிகாரியுமான திரு. யோகேந்திரா துரைசுவாமி அவர்களே மான நேற்றுக்காலை 10-22க்கு மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

இவ் வைபவத்தில், யாழ். மாவட்ட கமத்தொழில் உத்தியோகத்தர் திரு. எஸ். செமுத்துலிங்கம், மேலதிக அரசாங்கஅதிபர் திரு எம் பி. ஜெகநாதன், திரு கே தர்மபாலன், சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு ஏ ஆனந்தராஜன், நல்லூர் விவசாய போதனாசிரியர் திரு ஏ ஆனந்தகுமார், தணிக்கை அதிகாரி திரு சே யோகநாதன் உட்பட ஐ தே கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

செயலக வளவில் இரண்டு மாங்கன்றுகளும் இரண்டு இலுப்பை மரங்களும் நாட்டப்பட்டன. [செ]

உள்ளூராட்சி

## எழுதுவினைஞர் சங்க நிர்வாகிகள்

[திருகோணமலை]

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் 13வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெற்றது. திருகோணமலை நகரசபைத் தலைவர் திரு ஏ வி வெற்றிவேலு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு பி காசிநாதர் உள்ளூராட்சி சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு ஏ ச பி ரணசிங்க ஆகியோரும் அழைப்பின்பேரில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சூறவளியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு போதிய நிவாரணம் அளிக்கப்படவேண்டும். பல்கலைக்கழக பிரவேசத்தில் கடைப்பிடிக்கப்படும் தரப்படுத்தல் முறை நீக்கப்பட்டு நூற்றுக்கு நூறு வீதம் திறமை அடிப்படையில் மாணவர் தெரிவுசெய்யப்பட வேண்டும், சிங்களத் தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்க்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும் என்பன போன்ற தீர்மானங்களும் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்ற சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான உத்தியோகத்தர், நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் கடுமையான போட்டி நிலவியது. இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடைபெற்ற இத் தேர்தலில் பின்வரும் பதவியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; ம வேலுப்பிள்ளை, உபதலைவர்கள் ஏ எம் எம் சுபையிர், வி யோகரத்தினம், பொதுச்செயலாளர்: ஞா ரூ இராசசிங்கம் உதவிச்செயலாளர்: இ திருமேனி, பொருளாளர்; வை விஜய பாஸ்கரன், உதவிப்பொருளாளர்; செ து தனபாலசண்முகன், நிர்வாகசபை உறுப்பினர்கள்: ஆ சிவப்பிரகாசம், ச கருணாநாதன், பொ வெங்கடேஸ்வரன், இ கணேஸ்வரன், ந விஜயலக்ஷ்மி, எஸ் வி குலநாயகம், கோ சிவபாதசுந்தரம், கா செல்லத்துரை, டொன் பொஸ்கோ.

# இன்று நடைபெறும் மகாநாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்மாவட்டத்தில் அமுலில் இருக்கும் பத்திரிகைத் தணிக்கை சம்பந்தமான விசேட மகாநாடு இன்று பிற்பகல் யாழ்ப்பாண செயலகத்தில் நடைபெறும்

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் பாதுகாப்பு ஆலோசனை அதிகாரியுமான திரு யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் இம்மகாநாடு நடைபெறும். [செ]

# சங்கீத. கர்த்தாக்கள் விழா இன்றைய நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை சங்கீத வித்வத் சபையினரின் சங்கீத கர்த்தாக்கள் விழா இறுதிநாள் நிகழ்ச்சிகள், இன்று மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

தியாகராஜாசுவாமிகள் தினமாக அனுஷ்டிக்கப்படும் இன்றையவிழா நிகழ்ச்சிகள் வருமாறு:

### நிகழ்ச்சிகள்

மாலை 5-00 மணி ஒலிப்பதிவுகள், 6-15 திருமதி பிரேமா ஸ்ரீஸ்கந்தராஜா-பாட்டு, திரு. ஜி சண்முகானந்தம்-வயலின், திரு ஏ கணேசசர்மா-மிருதங்கம், 7-30 சொற்பொழிவு: திருமதி மீனாக்ஷி பொன்னுத்துரை தெலுங்கு அறிவிப்பாளர், 7-15 திரு ராம் குமாரசாமி-பாட்டு, திரு வி கே குமாரசாமி-வயலின், திரு. ஏ எஸ் ராமநாதன் - மிருதங்கம், 9-00 திரு ஆர் ராதாகிருஷ்ணன்-வயலின்.

## அரசமைக்கத் தயார்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சவான் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை பத்திரிகை நிருபர்கள் திரு. திரு சவானை சந்தித்தபோது; "பிரதமர் பதவிக்கு எவர் பெயரையும் நான் ஜனாதிபதிக்கு சிபார்சுசெய்யவில்லை, அது எனது வேலையும் அல்ல" என்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

### நேரடிப் போட்டி

மத்தியில் அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் திரு. சவான் தோற்றுவிட்டதைத் தொடர்ந்து இனிமேல் 'நேரடிப் போட்டி' நடைபெறலாம் என்று அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

அவை, ஜனதாவாகவும், 'ஜனதா-எஸ்' கட்சியாகவும் இருக்கலாம் என்று அரசியல் நோக்கர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

### சரண்சிங் கடிதம்

'ஜனதா-எஸ்' கட்சியின் தலைவர் திரு. சரண்சிங் நேற்று ராஷ்டிரபதி நீலம் சஞ்சீவரெட்டிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்; மத்தியில் நிலையான, உறுதியான அரசாங்கமொன்றை தம்மால் அமைக்க முடியுமென்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமது கட்சிக்கு காங்கிரஸின்றும், அகாலிதள் மற்றும் இடதுசாரிகளினதும் ஆதரவு உண்டு என்றும், அனைத்து இந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகம் உட்பட சில கட்சிகளின் ஆதரவும் கிடைக்கும் என்றும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் திரு. சரண்சிங் குறிப்பிட்டுள்ளார்.

### ஜனதா ஆலோசனை

இதற்கிடையே, ஜனதா பாராளுமன்ற நிர்வாகக்குழு நேற்று நீண்டநேரம்வரை கூடி, புதிய அரசு அமைக்கும் சாத்தியக்கூறுகள்பற்றி ஆராய்ந்தது. நிர்வாகக்குழு கூடுவதற்குமுன்னர் காபாந்து பிரதமர் திரு மொரார்ஜி தேசாயும், பிரதிப்பிரதமர் திரு. ஜெகஜீவன் ராமும் சுமுகமான 'சூழலில்' பேச்சு நடத்தினார்கள். ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் நேற்று சென்னை சென்றிருப்பதால் நிர்வாகக்குழு இன்று காலையும் கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலை திரு. ஜெகஜீவன்ராமை சந்தித்த பத்திரிகை நிருபர்கள் "மொரார்ஜி - ஜெகஜீவன்ராம் சந்திப்பு பற்றிக் கேட்டபோது, கருத்து எதுவும் வெளியிட திரு. ஜெகஜீவன் ராம் மறுத்துவிட்டபோதிலும் "கட்சி ஒன்றுபட்டுவிட்டது, மத்தியில் அரசு அமைக்கும் நிலையில் இப்பொழுது ஜனதா உள்ளது" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

### எம்.ஜி.ஆர். கருத்து

புதுடில்லியில் சில தினங்கள் தங்கிவிட்டு நேற்று தமிழ்நாடு திரும்பிய தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், நேற்று மாலை பத்திரிகைநிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான அறிகுறிகள் மிகவும் பிரகாசமாக உள்ளதென்றும் சில தினங்களில் புதிய அரசு அமைக்கப்பட்டுவிடும் என்றும் கூறினார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்று கேட்கப்பட்டபோது, அதனைத் தாம்மால் சொல்ல முடியாதென்றும், ஆனால் உறுதியான ஆட்சி அமைக்கும் கட்சிக்கு நிச்சயமாக அ. இ. அ. தி. மு. கழகம் ஆதரவளிக்கும் என்றும் கூறினார்.

ஆளுங்கட்சியுடன் இணைவீர்களா அல்லது வெளியில் இருந்து ஆதரவளிப்பீர்களா என்று கேட்டதற்கு "இதனை, ஆட்சி அமைத்த நேரத்தில்தான் உறுதியாகக் கூறமுடியும்" என்று தமிழக முதல்வர் தெரிவித்தார். திரு. எம் ஜி ராமச்சந்திரன் அடுத்தசில தினங்களில் மீண்டும் புதுடில்லி செல்லவிருக்கின்றார்.

## சர்க்கஸ் இன்று முடிகிறது

[யாழ்ப்பாணம்]

அப்பலோ சர்க்கஸ் காட்சிகள் யாழ்ப்பாணத்தில் இன்றுடன் முடிவடைகிறது

## கற்கால மனித குடியிருப்பு

புதுடில்லி, ஜூலை 22

இந்திய மாநிலமான மேற்கு வங்காளத்தில் கோதாவரி நதிக்கரையில் இந்திய தொல்பொருளியலாளர்கள் கற்காலமனித குடியிருப்பொன்றினைக் கண்டுபிடித்துள்ளனர்.

இக்குடியிருப்பில் கண்டெடுக்கப்பட்ட அம்புகளும் இதரகல்லாயுதங்களும் ஏறத்தாழ 20,000 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தவை என தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர்


# மத்திய கிழக்குநாடுகளுக்கு பணியாட்கள் உடனடியாகத் தேவை

(Lab.Lic. No. 99)

இடம்: பாஹ்ரேன், துபாய், எமன் (Yemen) சவுதி அரேபியா, ஜோர்தான் மற்றும் பல நாடுகளுக்கு.

1. வீட்டுப் பணிப்பெண்கள் (HOUSE MAIDS) ஆங்கிலத்தில் ஓரளவு கதைக்கக் கூடிய தேர்ச்சி பெற்ற 25—38 வயதுக்குட்பட்ட தேகாரோக்கியமுடைய பெண்கள், சம்பளம்: Rs 1500—3000 (உணவும் தங்குமிடமும் மற்றும் வசதிகளும் கொடுக்கப்படும்.)

2. வீட்டுக் கார் சாரதிகள் (DOMESTIC DRIVERS) ஆங்கிலத்தில் ஓரளவு கதைக்கக் கூடிய குறைந்தது 5 வருட அனுபவமுள்ள 21—45 வயதுக்குட்பட்ட தேகஆரோக்கியமுடைய ஆண்கள். சம்பளம்: Rs 2250—4000 (உணவும் தங்குமிடமும் மற்றும் வசதிகளும் கொடுக்கப்படும்)

3. பெண் தையல் செய்பவர்கள் (SCIENTIFIC DRESS MAKERS) ஆங்கிலம் தெரிந்த குறித்த அளவுப்படி உடுப்புத்தைப்பவர்கள். வயது; 25—45 உட்பட. சம்பளம்: தராதரத்தைப் பொறுத்தது.

4. இருவராக ஒரே வீட்டில் பணிபுரிபவர்கள் (COUPLES) [கணவன்/ மனைவி, சகோதரன்/சகோதரி] மேல் குறிப்பிட்ட வேலைகளுக்கு ஒரே இடத்தில் வேலை பார்ப்பதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

முக்கிய குறிப்பு: கடவுச்சீட்டு [Passport] தம்வசம் வைத்திருப்பவருக்கு முன் இடம் கொடுக்கப்படும். கடவுச்சீட்டு கூடியசீக்கிரம் எடுக்கக் கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விரும்பியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மூன்று பாஸ்போட் சைஸ் படங்களுடன் விண்ணப்பிக்கவும் / தொடர்பு கொள்ளவும்

THE REPRESENTATIVE

Lalani Shachitra Services

(Labour Licence No; 99)

C/o 123, SIVAPRAGASAM Road

JAFFNA

குறிப்பு: நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும். 3094


## மரண அறிவித்தல்

### ஐ. இந்திரராஜா

யாழ். சித்த ஆயுர்வேதக் கல்லூரி முதலாம் வருட மாணவனும், யாழ் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்தவருமான ஐயாத்துரை இந்திரராஜா அகால மரணமானார்.

இவர் டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, செல்லக்கண்டு ஆகியோரின் மகனும் பேரின்பலக்சுமி, யோகலக்சுமி [ஆயுர்வேதக்கல்லூரி மாணவி] ஆகியோரின் சகோதரருமாவார்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். 3115

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதி இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஜூலை மாதம் 23ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QJ/8945/78 The Eelanaadu P B No: 49; Telegrams: Eelanaadu Tel: 489;